6th March 1963]

கனம் திரு. பி. கக்கன் : முதலியார் வகுப்பில் கைக்கோள முதலியார் என்ற இனத்தவருக்கு சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஏ. எஸ். தட்சிணாமூர்த்தி கவுண்டர் : முதலியார் வகுப்பிலே கைக்கோளர் என்பது வேறு வகுப்பினர் அல்ல. இரண்டும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள்தான். முதலியார் என்று தப்பித் தவறி எழுதிவிட்டால் சலுகைகள் கிடைக்காது, கைக்கோளர் என்று போட்டால் சலுகை கிடைக்கிறது. இதை மாற்றி அமைக்க முடியுமா என்றுதான் கேட்கிறேன்.

கனம் சபாநாயகர் : தப்பித்தவறிக்கூட அப்படி எழுதக்கூடாது என்று அவர்களிடத்தில் கனம் அங்கத்தினர் சொல்லலாம்.

கனம் திரு. பூ. கக்கன் : அவ்விதம் மாற்றி அமைக்க இப்போது உத்தேசமில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. காஞ்சி மணிமொழியார் : ஸார், இப்போது விலைவாசி ஏற்றத்தினால் குடும்பச் செலவு மிகவும் அதிகரித்திருக்கிறது. ஆகையால் இப்போது பிற்பட்ட வகுப்பினருக்கு உபகாரச் சம்பளச் சலுகை கொடுப்பதற்கு ரூ. 1,500-க்குள் வருட வருமானம் இருக்கவேண்டும் என்றிருப்பதை ரூ. 2,000 என்று உயர்த்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது உயர்த்துவதற்கு இல்லை. இருந்தாலும் அதுவும் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து வருகிறது.

திரு. கே. ஏ. மதியழகன் : மாநில ஸ்காலர்ஷிப்புக்கு கடந்த வருஷம் ஒரு பட்டியல் தயாரிக்கப்பட்ட பிறகு அதில் சேர்க்கப்பட்ட மாணவர்களுக்கு மத்திய ஸ்காலர்ஷிப் கிடைத்த காரணத்தினால் அந்த ஸ்காலர்ஷிப்பைக் கொடுத்து விட்டு, இந்த மாநிலத்திலிருந்து ஸ்காலர்ஷிப் யாருக்கும் கொடுக்கப்படாமல் திரும்பி வந்து விட்டது என்பது உண்மை தானா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இப்போது இல்லை.

திரு. ஆர். ரங்கசாமி : ஸார். எஸ். எஸ். எல். ஸி. படித்து விட்டுச் சென்றால் தான் பாலிடெக்னிக்குகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கப்படுகிறது. பி.யூ.ஸி. படித்து விட்டுச் சென்றவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கிடையாது என்று ஜி.ஓ. இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பி.யூ.ஸி. படித்தவர்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் கஷ்டப்படுவதால் அந்த உத்திரவை மாற்றுவதற்கு அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன் : அந்த மாதிரித் தகவல் என்னிடத்தில் இல்லை.

Sanskrit students and pandits (High schools)

*137 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) the total number of students studying Sanskrit in all the High Schools of our State;

TRUTH ALONE TRIUMPHS

(*b*) the number of Sanskrit Pandits who are employed for the purpose in all the High Schools of our State; and

(*c*) total expenditure incurred on behalf of Sanskrit Pandits in all the schools of our State in 1961–62?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 14,896.

(*b*) 189.

(*c*) Rs. 3,42,728.

திரு. கே. ஏ. மதியழகன் : ஸார், இதே மாதிரியான அக்கரை நம்முடைய அண்டை மாநில மொழிகளான தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளின் மீதும் செலுத்தி, மும்மொழித் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்ய சர்க்கார் என்ன முயற்சிகளை எடுத்திருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : யார் யார் எந்த மொழிகளில் கற்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதற்கு வேண்டிய சலுகைகளையும், அதற்கு வேண்டிய வசதிகளையும் அளித்து வருகிறோம். இந்த மாநிலத்திலே ஏழு மொழிகள்—ஆங்கிலம், தமிழ் உட்பட ஏழு மொழிகள்—போதனு மொழியாக அமைக்கப்பட்டு அதற்கு வேண்டிய வசதிகள் உயர்நிலைப் பள்ளிகளில் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. மு. கருணாநிதி : சமஸ்கிருத மாணவர்களில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களே இருக்கிறார்களா? அல்லது எல்லா வகுப்பினரும் இருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு குறிப்பிட்ட வகுப்பினரே இருக்கிறார்கள் என்பது சரியல்ல.

புலவர் கா. கோவிந்தன் : சமஸ்கிருதத்தைப் பேச்சு மொழியாகக் கொண்ட இடமோ, மக்களோ எங்காவது தனியாக இருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பேச்சு மொழியைத்தான் படிக்க வேண்டும் என்பது அல்ல. அதாவும் புலவர் கேட்கக் கூடிய கேள்வி அல்ல இது. (சிரிப்பு).

திரு. கே. மூக்கையா தேவர் : தற்போது இருக்கிற பாடத் திட்டப்படி இரண்டாவது பாட மொழியாக இந்திக்கு பதில் சமஸ்கிருதம் என்று இருக்கிற காரணத்தினால் சமஸ்கிருதம் படிக்கும் மாணவர்கள் குறைந்து வருகிறார்கள். முன்னால் இருந்த மாதிரி சிறப்புத் தமிழ் அல்லது சமஸ்கிருதம் என்று இருந்தால்தான் அதிக மாணவர்கள் சேருவார்கள். அம்மாதிரி மாற்றி அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் பிரச்னை மாநில கல்வி ஆலோசனைக் குழுவில் கவனிக்கப்பட்டு வருகிறது. ஆனால் தமிழ் கற்பதற்கு எந்த விதத்திலும் பாதகம் ஏற்படக் கூடிய அளவில், அதற்குப் பதிலாக சமஸ்கிருதத்தை வைப்பதை ஆதரிக்கவில்லை—

ஆதரிக்க முடியாது. ஆனால் வேறு பாடங்களுக்கு பதில் சமஸ்கிருதத்தை வைத்து வசதி அளிக்கலாம் என்பது என்னுடைய யோசனை..

High schools (Re-introduction of Forms)

* 138 Q.—SRI C. CHIRANJEEVALU NAIDU (on behalf of SRI V. SANKARAN): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether there is any proposal to abolish the Standards and re-introduce Forms in High Schools; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) No, Sir.

(b) Does not arise.

Adult schools

* 139 Q.—PULAVAR K. GOVINDAN (on behalf of SRI R. S. VEERAPPA CHETTIAR): Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether any teachers are being trained for handling adult schools;

(b) if so, the number trained and the amount of subsidy paid to each;

(c) the places where adult schools are functioning now; and

(d) the places where such schools are proposed to be opened during the year 1962?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A paper[a] is placed on the Table of the House.

திரு. கே. ஏ. மதியழகன்: ஸார், இங்கு மேஜை மீது வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் சென்னை நகரத்தில் இந்த முதியோர் பள்ளிகளில் ஒரு பள்ளி கூட இல்லை. மற்ற மாவட்டங்களில் நிறைய அமைந்திருக்கின்றன. இப்போது பரிசீலனையில் இருக்கிற கல்விக் கொள்கை தீர்மானம் ஆகிய பிறகு முதியோர் கல்வி வரும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி வரும்போது சென்னையிலும் முதியோர் பள்ளிகள் அமைக்கப்படுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: சமீபத்தில் இதைப் பற்றி ஆராய்ந்தார்கள். இப்போது முதியோர் கல்வியைப் பரப்புவது நிறுத்தப்பட்டிருக்கிறது. குறிப்பிடப்பட்டிருக்கிற 500 செண்டர்கள்தான் இருக்கின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 லட்சம் ரூபாய் இதற்கென்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்திற்கு அப்பாலும் நிதி உதவி அளிக்கிறோம். முதியோர் கல்வித் திட்டத்தைப் பரப்பவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். வருகிற ஆண்டிலே 300 அடல்ட் எஜுகேஷன் செண்டர்களை அமைப்பது என்பது யோசனை. அவ்வாறு

---

[a] Printed as Appendix II on pages 108–112